**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, FAST TRACK COURT, KARAIKUDI.**
**C.C. No. 67/2024 D.W.1**

| | | | | |
|---|---|---|---|---|
| பெயர்: | : | கண்ணன் | க–பெ/ த–பெ | மாரியப்பன் |
| ஊர்: | : | புளியம்பட்டி, மதுரை | சமயம் | |
| வயது: | : | 63/2026 | வட்டம்: | |
| தொழில்: | : | போஸ்ட்மேன் ( ஓய்வு) | மாவட்டம் | |

**Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 05.08.2026**

---------------------------------------------------------------------------------------------------------

**<u>05.08.2026</u>**

**<u>முதல் விசாரணை</u>**

1) ஜூன் 2022 ல் எனது மகளுக்கு திருமணம் நிச்சயம் செய்யப்பட்டது. அதற்காக மதுரையில் உள்ள ராஜதுரையிடம் ரூ. 5,00,000/– கடன் பெற்றேன், மாதம் 2 சதவீதம் வட்டியாகும். அதற்கு மாதம் ரூ.10,000/– சரியாக செலுத்திவந்தேன். 03.08.2023 ஆகஸ்டில் எனது பணி ஓய்வு தொகையில் இருந்து வங்கியில் இருந்து ரூ.50,000/– எடுத்து அதை ராஜ துரையிடம் கொடுத்தேன். 04.08.2023 ஆகஸ்டில் எனது பணி ஓய்வு தொகையில் இருந்து வங்கியில் இருந்து ரூ.1,50,000/–எடுத்து அதை ராஜ துரையிடம் கொடுத்தேன். 04.09.2023 ல் எனது பணி ஓய்விற்காக ரூ.3,81,000/– பெற்றேன், அதில் இருந்து ரூ.3,00,000/– எடுத்து அதை ராஜ துரையிடம் கொடுத்தேன். மொத்தமாக ரூ.5,00,000/– அசல் தொகை மற்றும் வட்டியை திருப்பி செலுத்திவிட்டேன். **(2023 முதல் உள்ள கண்ணனின் SBI வங்கி கணக்கு புத்தகம் அசல் எ.ம.சா.ஆ.1 ஆக குறியிடப்படுகிறது)** கடன் பெறும்போது கையொப்பம் செய்து நிரப்பாமல் காசோலையை செக்யூரிட்டிக்காக ராஜதுரையிடம் கொடுத்து வைத்திருந்தேன். பணத்தை கொடுத்து முடித்த பின்னர் எனது காசோலையை திருப்பி கேட்டேன், அவர் 2 நாட்களில் தருவதாக கூறினார், தராததால் 10 நாட்களில் மீண்டும் காசோலையை கேட்டேன், அதற்கு வட்டி பாக்கி உள்ளது என்றும், அதை தந்துவிட்டு

காசோலையை பெற்றுக்கொள்ளும்படி கூறினார். அந்த விபரத்தை எனக்கு தெரிந்த பசீர் முகம்மது, மற்றும் மணிமாறனிடம் கூறினேன், அவர்கள் ராஜதுரையிடம் அதை பற்றி கேட்டார்கள், அதற்கு ராஜதுரை என்னிடம்  காசோலை கொடுத்து விடுவதாக கூறினார். அப்போது எனக்கு2024 ல்  விபத்து ஏற்பட்டதால் அரசு மருத்துவமனையில் சிகிச்சை எடுத்து வந்தேன், அப்போது எனது செக்யூரிட்டி காசோலையை ரமேஷ் என்பவர் மூலமாக தவறாக பயன்படுத்தி தற்போதைய வழக்கு தாக்கல் செய்துள்ளார், தற்போதைய புகார்தாரர் ரமேஷ் யார் என்றே எனக்கு தெரியாது. அவரிடம் காசோலை எதுவும் நான் கொடுத்ததில்லை, ராஜதுரையிடம் மட்டும்தான் காசோலை கொடுத்திருந்தேன். மருத்துவமனையில் சிகிச்சையில் இருந்ததால் சட்ட அறிவிப்பிற்கு பதில் அளிக்க இயலவில்லை. ரமேசிற்கும் எனக்கும் எந்த ஒரு தொடர்பும் இல்லை, அவர் ஊருக்கு நான் சென்றதில்லை. பொய்யான வழக்காகும்.

<u>குறுக்கு விசாரணை</u>

புகார்தாரர் தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் காலம் கேட்டுக்கொண்டதால் குறுக்கு விசாரணை ஒத்தி வைக்கப்படுகிறது

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

VALLIMANALAN S A

Digitally signed by VALLIMANALAN S A
Date: 2026.08.05 18:46:46 -0400

நீதித்துறை நடுவர்,
விரைவு நீதிமன்றம்,காரைக்குடி.